*11*

# சர்வ வல்லவரே, என்னை நினைவில் வையும்!

## (5:19-22)

*எரேமியா தமது புலம்பல்களை முடிக்கையில், அவர் மூன்று விஷயங்களுக்காகத் தேவனிடத்தில் ஜெபித்தார்: நினைவுகூருதல், மீளக்கட்டியெழுப்புதல் மற்றும் புதுப்பித்தல்:*

> *கர்த்தாவே, நீர் என்றென்றைக்கும் இருக்கிறீர், உம்முடைய சிங்காசனம் தலைமுறை தலைமுறையாக நிலைநிற்கும். தேவரீர் என்றைக்கும் எங்களை மறந்து, நெடுங்காலமாக எங்களைக் கைவிட்டிருப்பதென்ன? கர்த்தாவே, எங்களை உம்மிடத்தில் திருப்பிக்கொள்ளும், அப்பொழுது திரும்புவோம், பூர்வகாலத் திலிருந்ததுபோல எங்கள் நாட்களைப் புதியவைகளாக்கும். எங்களை முற்றிலும் வெறுத்துவிடுவீரோ? எங்கள்பேரில் கடுங்கோப மாயிருக்கிறீரே (5:19-22).*

*இவ்வார்த்தைகளுக்கு இசையமைக்கப்படும் என்றால், மூன்று வேண்டுகோள்கள் அந்தப் பாடலின் பல்லவியை அமைப்பதாக இருக்கும். அவைகள் நம்பிக்கை நிறைந்த வேண்டுகோள்களாக, தேவன் மக்களைத் திரும்ப எடுத்துக்கொள்வதற்கான ஒரு விண்ணப்பமாக இருக்கின்றன. இந்தப் புலம்பல்கள் முழுவதிலும், தேவன் தமது மக்களை மறந்து விடுவதாகக் காணப்பட்டபோதிலும், அவர் ஒருக்காலும் அவர்களை மறப்பதில்லை என்று சுட்டிக்காண்பிக்கிற நம்பிக்கையின் சுருக்கமான கூற்றுக்களை நாம் கண்டுள்ளோம். மீளச் செய்தலுக்கான எரேமியாவின் பாதையில் நாம் நடந்து, அவரது வேண்டுகோள்களைத் தேவன் நிறைவேற்றுவார் என்ற அவரது நம்பிக்கையைக் காண்போம்.*

### எங்களை நினைவுகூரும்

*தேவன் யூதாவை மறந்திருந்தாரா? அவர் துன்மார்க்கரின் பாவங்களினிமித்தம் நீதிமான்களையும் கூடக் கைவிட்டிருந்தாரோ? மன்னிப்பதற்குத் தேவன் கொண்டிருந்த மனவிருப்பத்தில் எரேமியா சந்தேகத்தை வெளிப்படுத்தினாரா? அல்லது யூதாவின் அக்கிரமங்களைத் தேவன் அகற்றிப்போடுவதற்கு நீண்ட காலம் ஆகுமளவுக்கு அவைகள்*

*மிகவும் அதிகமாய் இருந்தன என்று அவர் ஒப்புக்கொண்டிருந்தாரா? இதனுடன் ஒப்பிடக்கூடிய ஒரு முறையீட்டை, சிலுவையிலிருந்து இயேசு சங். 22:1ஐ மேற்கோள் காண்பித்து ஏற்படுத்தினார்: "என் தேவனே! என் தேவனே! ஏன் என்னைக் கைவிட்டீர்" (மத். 27:46ஆ). இயேசு, தனிமையில் தாம் பாடுபட வேண்டியிருந்தது ஏன் என்று அறியாதிருந்தாரா அல்லது அவர் அந்தப் பாடுகளின் பெருந்துன்பத்தை மாத்திரம் வெளிப்படுத்தினாரா?*

*எரேமியாவின் முறையிடுதல் நம்பிக்கையற்றதாக இருக்கவில்லை. என்றென்றைக்கும் ஆளுகைசெய்கின்ற தேவனுடைய இராஜரீகத்தை அவர் ஒப்புக்கொண்டிருந்தார். தேவன் நினைவுகூருவதற்கு வல்லமையும் செயல்படுவதற்கு அதிகாரமும் கொண்டிருந்தார். அவர் ஒருவர் மாத்திரமே கட்டுபடுத்துபவராக இருக்கின்றார். அவரது சிங்காசனம் தலைமுறை தலைமுறைக்கும் உள்ளது. காலங்கள் மாறலாம். நிகழ்ச்சிகளும் சூழ்நிலைகளும் மாற்றப்படலாம், ஆனால் ஒரு விஷயம் மாறாததாக உள்ளது: தேவனுடைய இராஜரீகமானது என்றைக்கும் ஒரேமாதிரியாக நிலைத்துள்ளது. அவரது வசனம் எல்லா தலைமுறைகளுக்குமானதாக உள்ளது.*

*தேவன் நம்மைப்போல் காலத்தை அளவிடுவதில்லையாதலால், அவர் நம்மை மறந்து விட்டதாகத் தோன்றலாம். அவர் தமது மக்களுக்குத் தாம் எவ்வளவாகத் தேவை என்பதை அவர்கள் உணர்ந்தரியக் காரண மாகுமளவுக்குப் போதிய காலகட்டத்திற்கு அவர்களைத் தனிமையில் விட்டுவிடுகின்றார், ஆனால் அவர்களை அவர் மறப்பதில்லை! உண்மையில் எருசலேம் வீழ்ச்சியடைவதற்கு நீண்ட காலம் முன்னதாகவே, தேவன் ஏற்கனவே, மீட்சியினூடே காண்பவர்கள் யார் என்பதை நியமித்திருந்தார். அடிமைத்தனத்தில் இருந்து அவர்களின் விடுதலையானது ஏற்கனவே திட்டமிடப்பட்டிருந்தது. அதை எரேமியா அறிந்திருந்தார்.*

*தேவனுடைய மக்கள் அவரை மறக்கக் கூடாது என்பதே அவர்களின்மீது தேவனுடைய அக்கறையாக இருந்தது. எழுபது ஆண்டுகள் அடிமைத்தனத்தினூடாக அவர்களின் விசுவாசத்தை உயிருடன் காத்துக் கொள்வதற்காக அவர் ஏற்கனவே இரண்டு தீர்க்கதரிசிகளை நியமித் திருந்தார். கி.மு.586ல் எருசலேம் அழிக்கப்பட்டபோது பாபிலோனில் தானியேலும் எசேக்கியேலும் இருந்தனர். கி.மு.606ல் எருசலேம் முதன் முறை பிடிக்கப்பட்டபோது, தானியேல் பிடிக்கப்பட்டு அழைத்துச் செல்லப்பட்டிருந்தார். அவர் அரசனின் அரண்மனையில் சேவிப்பதற்குப் பயிற்றுவிக்கப்பட்டவர்களில் ஒருவராக இருந்தார் (தானி. 1) ஒன்பது ஆண்டுகளுக்குப் பின்பு, கி.மு. 597ல், எசேக்கியல் வந்து சேர்ந்தார். அரண்மனையில் தானியேலுக்கு இருந்த செல்வாக்கு, யூத நாட்டில் ஊழியம் செய்துகொண்டிருந்த எசேக்கியேல் ஏற்கனவே நன்குஅறிந்த ஒன்றாக இருந்தது (எசே. 14:14, 20). எருசலேம் எரிக்கப்பட்ட பின்பு சிறைப் பிடிக்கப்பட்டவர்கள் வந்து சேர்ந்தபோது, அழிவு நேர்ந்திருந்தது ஏன் என்று விளக்கம் அளிக்க எசேக்கியேல் புறப்பட்டார். அவரது புத்தகத்தின் நாற்பத்தி எட்டு அதிகாரங்களில், "நானே ஆண்டவர் என்று நீங்கள் அறிவீர்கள்" என்ற சொற்றொடரை நாம், அறுபதுக்கும் அதிகமான*

முறைகள் காணுகின்றோம். இந்தச் சொற்றொடரானது, சிறைப்பிடிக்கப் பட்டவர்களின் மத்தியில் தேவனுடைய செயல்பாட்டின் சந்தர்ப்பப் பொருளில் எப்போதும் பயன்படுத்தப்பட்டுள்ளது. அவர்களின் நாடு மற்றும் சுதந்திரம் ஆகியவை வேதனை நிறைந்த வகையில் இழக்கப்பட்டது கூட, தேவனே கர்த்தராய் இருக்கின்றார் என்பதை அவர்களுக்குப் போதிக்கவும் அதை அவர்கள் நினைவுகூரவும் காரணமாகவே இருந்தது. அவர்கள் அந்தப் பாடத்தை மறக்கவில்லை. அடிமைத்தனத்தில் இருந்து திரும்பியபின்பு, அவர்கள் விக்கிரக ஆராதனைக்குள் திரும்பவும் ஒருக்காலும் விழுந்துபோகாதிருந்தனர்.

தேவனுக்காகப் பேசியதில் எசேக்கியேல், "ஆகிலும் உன் இளவயதில் உன்னோடே பண்ணின என் உடன்படிக்கையை நான் நினைத்து, நித்திய உடன்படிக்கையை உனக்கு ஏற்படுத்துவேன் ... நான் கர்த்தர் என்று அறிவாய்" (எசே. 16:60-62). தேவன் உண்மையுள்ளவராக இருக்கின்றார்! அவர் மறந்துபோகமாட்டார்! "நாம் அவரை மறந்துபோய் விடுவோமா?" என்பதே கேள்வியாக உள்ளது. நம் வாழ்வில் எத்தனை நாட்கள், நாம் தேவனைப்பற்றி மிகவும் அரிதாகவே சிந்தித்துப் பார்த்த நிலையில் கடந்து சென்றுள்ளன? நம்மில் எத்தனைபேர் தேவனுடன் அன்றாட அடிப் படையில் நாம் செயல்பட அவசியம் இராதபடிக்கு, அவரை நமது வாழ்வின் மையத்திலிருந்து புறம்பே விளம்பிற்குத் தள்ளியிருக்கின்றோம்? எத்தனை பேர் துன்பம் வரும்போது மாத்திரம் தேவனை நினைக்கின்றனர்? நாம் தேவனை ஒரு மருத்துவரைப்போல், அத்தியாவசியத் தேவை ஏற்படும் போது மாத்திரம் அவரை அழைக்கின்றோமா?

மக்கள் தேவனை மறந்திருந்த ஒரு காலத்தில் எரேமியா வாழ்ந்தார். தேவன் மக்களை மறந்துவிட அல்லது கைவிட வேண்டாம் என்று எரேமியா வேண்டிக்கொண்டதில் வியப்பெதுவும் இல்லை. ஜெபத்தை முறையாகச் செய்தல், வேதாகம வாசிப்பு மற்றும் ஆராதனை ஆகியவற்றில் ஒழுங்கும் கிரமமுமாக இருத்தல் என்பதற்கு இவைகள் தேவனை நமக்கு நினைவூட்டு கின்றன என்பது ஒரு காரணமாக உள்ளது. மறத்தல் என்பது எவ்வளவு சுலபமானது என்பதைத் தேவன் அறிந்திருக்கின்றனர். அவர் இன்னமும் இருக்கின்றார் மற்றும் அவர் இன்னமும் தேவனாகவே இருக்கின்றார் என்பதை நமக்கு நினைவூட்டுவதற்காக அவர் வாழ்வின் சாலை நெடுகிலும் அடையாளப் பலகைகளை வைத்திருக்கின்றார். ஆராதனைக்கான வாய்ப்புக்களுக்கு நாம் கவனம் செலுத்தாதபோது, ஜெபிப்பதற்கு மிக அரிதாகவே நினைக்கின்றபோது, வேதாகமத்தின் மூலம் தேவன் நம்மிடத்தில் பேசுவதற்கு அனுமதிக்க நேரம் எடுத்துக் கொள்ளாதபோது, அவர் நமது கவனத்தைப் பெறுவதற்கு அதிக அழிவுதரும் வழிமுறைகளைச் செயல்படுத்த வேண்டியதாகிறது. யூதா மற்றும் எருசலேமின் அனுபவத்தில் இருந்து நாம் பாடங்களைக் கற்றுக்கொள்வோம்.

## எங்களை மீளக்கட்டுவியும்

மீளக்கட்டுவித்தல் என்பது வேதாகமத்தின் ஆய்வுப்பொருளாக உள்ளது. ஏதேன் தோட்டத்தில் ஆதாம் ஏவாள் ஆகியோரின் வீழ்ச்சியில்

இருந்து (ஆதி. 3) வெளிப்படுத்தின விசேஷத்தின் முடிவு வரையிலும், தேவன் தம்முடைய மக்களைத் தம்மிடத்தில் மீளக்கட்டுவித்துக் கொள்வதற்காக அவர்களின் வாழ்வில் கிரியை செய்கின்றவராய் இருந்தார். "மீளக்கட்டுவித்தல்" என்பது தொடக்க நிலைக்குத் திரும்புதல் என்று அர்த்தப்படுகிறது. ஒரு வீட்டை மீளக்கட்டுவித்தல் என்றால், அதைத் தொடக்கத்தில் கட்டியவரால் உண்டாக்கப்பட்ட அதே போன்ற நிலைக்கு அதைத் திரும்பவும் கட்டியெழுப்புதல் என்று அர்த்தப்படுகிறது. கார் ஒன்றை மீளக்கட்டுவித்தல் என்பது, அது தொழிற்சாலையில் இருந்து வெளிவந்த போது இருந்தவாறு அதைத் திரும்பச் செப்பனிடுதல் என்று அர்த்தப்படுகிறது.

யூதா நாடானது தேவனால் தேர்ந்துகொள்ளப்பட்ட நாடு என்ற வகையில் அது முன்பிருந்த தனது தோற்றக்கால இடம் மற்றும் நிலை ஆகியவற்றிற்குத் திரும்ப வேண்டும் என்பதே எரேமியாவின் வேண்டுகோளாக இருந்தது. அவர் யூதாவின் வளம் வாய்ந்த நாட்களில் இருந்த வாழ்வின் வழிமுறைகளைப்பற்றி நினைத்திருக்கலாம். மிகவும் முக்கியமாக அவர், மக்கள் தேவனுடன் உள்ள சரியான உறவுமுறைக்கு மீளக்கட்டி எழுப்பப்பட வேண்டும் என்று கேட்டுக்கொண்டிருந்தார். தேவன் அவர்களை உண்மைத் தன்மைக்கும் நீதிக்கும் மீளக்கட்டி எழுப்ப வேண்டும் என்று அவர் விரும்பினார். தேவன் அவர்களை அடிமைத் தனத்தில் இருந்து திருப்பி மீண்டும் அவர்களை ஒரு மக்களினமாகக் கட்டி எழுப்புவார் என்று அவர் ஏற்கனவே அறிந்திருந்தார். அவர் தமது தீர்க்கதரிசனங்களின் புத்தகத்தில், "நான் அவைகளை விசாரிக்கும் நாள்வரைக்கும் அவைகள் அங்கே இருக்கும், பின்பு அவைகளைத் திரும்ப இந்த ஸ்தலத்திற்குக் கொண்டுவரப்பண்ணுவேன் என்று கர்த்தர் சொல்லுகிறார்" (எரே. 27:22). மற்றும் அவர், "நான் உனக்கு ஆரோக்கியம் வரப்பண்ணி, உன் காயங்களை ஆற்றுவேன் என்று கர்த்தர் சொல்லுகிறார்" என்றும் அறிவித்தார் (எரே. 30:17ஆ). தொடர்ந்து வரும் வசனங்களில், அவர் மக்களை அவர்களின் சொந்த நாட்டிற்குத் திரும்பக் கொண்டு வருவதற்குத் தேவனுடைய வாக்குத்தத்தங்களை விரிவாகக் கூறினார்.

எழுபது ஆண்டுகளுக்குப் பின்பு பாபிலோன், பெர்சியப் பேரரசிடம், பெர்சிய அரசரான கோரேஸ் என்பவரிடம் வீழ்ச்சியடைந்தது, அவர் அடிமைத்தனத்தில் இருந்த மக்கள் யாவரும் தங்கள் சொந்த நாட்டிற்குச் செல்லவும், நகரத்தையும் தேவாலயத்தையும் மீண்டும் கட்டி எழுப்பவும் ஆணை பிறப்பித்தார் (எஸ்றா 1:1-4). இது "எரேமியாவின் வாயினால் உரைக்கப்பட்ட கர்த்தருடைய வார்த்தையை" நிறைவேற்றுவதற்கானதாக இருந்தது. தேவன் தமது வாக்குத்தத்தங்களைக் காக்கின்றார் என்பதை எரேமியா அறிந்திருந்தார். அதை மக்கள் அறிய வேண்டும் என்று விரும்பினார். அவர் தேவனுடைய சித்தம் என்று தாம் முன்பே அறிந்திருந்தது எதுவோ, அதற்காக ஜெபித்தார்.

"ஓ கர்த்தாவே, எங்களை உம்மிடத்திற்கு மீளக்கட்டுவியும்" என்பது இன்றைய நாட்களிலும் அவசியமாக உள்ள ஜெபமாக நிலைத்திருக்கிறது. மீளக்கட்டுவித்தல் என்பது ஒருமுறை செய்து முடிக்கப்பட்டுவிடக்கூடிய

விஷயம் அல்ல. இது தொடர்ச்சியான ஒரு செயல்முறையாக உள்ளது. தேவனுடைய மக்களை அவரிடமாக மீளக்கட்டுவித்தல் என்பதே இயேசுவின் ஊழியமாக இருந்தது. ஒரு மக்களைத் தேவனிடத்திற்கு மீளக் கட்டுவித்தல் என்பதே புதிய ஏற்பாட்டு சபையின் ஊழியமாக உள்ளது. கிறிஸ்தவர்கள் என்ற வகையில் இன்றைய நாட்களில் நாம், சபைக்கு இயேசுவின் உண்மையான சீஷத்துவத்தை மீளக்கட்டியெழுப்புதல் மற்றும் பூமியில் தேவன் விரும்புகின்றபடி புதிய ஏற்பாட்டு சபையை மீளக்கட்டி எழுப்புதல் என்பவைகளே நமது ஊழியமாக உள்ளது. ஒரு சகோதரர் தேவனை விட்டுவிலகி, பாவத்தினால் மேற்கொள்ளப்படுவார் என்றால், நாம் “சாந்தமுள்ள ஆவியோடே அப்படிப்பட்டவர்களைச் சீர்பொருந்தப் பண்(ண)’’ வேண்டும் (கலா. 6:1). தேவன் விரும்புகின்ற வகையில் ஒவ்வொன்றையும் மீளக்கட்டி எழுப்புதலென்பது உலகத்தின் நம்பிக்கையாக உள்ளது.

## எங்களைப் புதுப்பியும்

தேவனுடைய மக்களுக்கு மீளக்கட்டி எழுப்பப்படுதல் மாத்திரமல்ல ஆனால், புதுப்பித்தலும் தேவையாக உள்ளது. பழையவைகள் மீளக்கட்டி எழுப்பப்பட முடியும், ஆனால் மீளக்கட்டி எழுப்பப்படுதல் என்பது ஒன்றைப் புதிதாக்கி விடுவதில்லை. இயேசு, “நீங்கள் மறுபடியும் பிறக்க வேண்டும்’’ என்று கூறினார் (யோவா. 3:7). இதில் இயேசு அர்த்தப் படுத்தியது என்ன என்பதைப் புரிந்துகொள்வதில், யூதர்களின் நடத்துனராக இருந்த முக்கியத்துவம் வாய்ந்த ஒரு மனிதர் சிரமம் அடைந்தார். பழையதாக இருப்பதைத் தேவனால் மாத்திரமே புதிதாக்க முடியும். இந்தப் புதிதாக்குதல் என்பது உடல்ரீதியானதல்ல; இது ஆவியின் உள்ளான மறுமலர்ச்சியாக இருக்கிறது. தாவீது தேவனிடத்தில், “தேவனே,சுத்த இருதயத்தை என்னிலே சிருஷ்டியும், நிலைவரமான ஆவியை என் உள்ளத்திலே புதுப்பியும்” என்று வேண்டுதல் செய்தார் (சங். 51:10). நாம், தேவன் மாத்திரமே நம்மைப் புதுப்பிக்க முடியும் என்பதை உணர்ந்தறிவ தோடு, அவர் தமது சித்தத்தை நமக்குள் செயல்படுத்தக் காத்திருப்பதற்கு மனவிருப்பம் உள்ளவர்களாகவும் இருக்க வேண்டும். “கர்த்தருக்குக் காத்திருக்கிறவர்களோ புதுப்பெலன் அடைந்து, கழுகுகளைப்போலச் செட்டைகளை அடித்து எழும்புவார்கள், அவர்கள் ஓடினாலும் இளைப் படையார்கள், நடந்தாலும் சோர்ந்துபோகார்கள்” (ஏசா. 40:31).

ஆவிக்குரிய புதுப்பித்தல் என்பது ஒரு தொடர்ச்சியான செயல்முறை யாகவும் உள்ளது. கிறிஸ்தவர்கள் நன்றாக இருக்கும் நிலையில் கூடச் சோர்ந்து போய்விட முடியும். உடலுக்கு உணவளிப்பதும் ஓய்வளிப்பதும் எவ்வளவு அவசியமோ, அதுபோலவே ஆவிக்கும் உணவளிப்பதும் ஓய்வளிப்பதும் அவசியமாக உள்ளது. உள்ளான மனுஷன் என்ற ஆவியானது தேவனுடைய பிரசன்னத்தில் இளைப்பாற வேண்டியதாக உள்ளது. ஒருமுறை இயேசு, தமது சீஷர்களிடத்தில் “வனாந்தரமான ஓரிடத்தில் தனித்துச் சற்றே இளைப்பாறும்படி போவோம் வாருங்கள்”

*என்று கூறினார் (மாற். 6:31). இந்த "அமைதியான வேளை" என்பது அவர்களின் சரீரப்பிரகாரமான உடல்களுக்கு இளைப்பாறுதல் தருவதற்காக மாத்திரமல்ல, ஆனால் அவர்களின் ஆவிகளைப் புத்துயிர்பெறச் செய்வதற்குமான வேளையாயிருந்தது என்று நான் நம்புகின்றேன்.*

*அமைதியாயிருப்பதற்கு, ஒவ்வொரு நாளிலும் கொஞ்சம் நேரத்தை ஒதுக்குங்கள். தேவனுக்காகக் காத்திருங்கள், நீங்கள் தேவனுடன் ஜெபத்தில் பேசுகையில், அவர் தமது வசனத்தின் மூலமாக உங்களுடன் பேசட்டும். நீங்கள் அவருடன் எவ்வளவு அதிகமான நேரம் செலவிடுகின்றீர்களோ, அவ்வளவுக்கு நீங்கள் அவரைப்போல் ஆவீர்கள். அவருடைய பிரசன்னத்தின் வெளிச்சத்தில் நீங்கள் எவ்வளவு அதிகமாகக் குளிர் காய்கின்றீர்களோ, அவ்வளவு அதிகமாக நீங்கள் அவருடைய இயல்பில் தோய்க்கப்படுவீர்கள். தேவனுடைய பிரசன்னத்தில் இருந்ததினால் பிரகாசிக்கும் முகத்தைப் பெற்ற மோசேயைப் போல் (யாத். 34:29-35), நீங்கள் தேவனுடைய பிரசன்னத்தில் இருந்திருக்கும்போது கிடைத்ததை உங்கள் முகத்தில் வெளிப்படுத்திக் காண்பிப்பீர்கள். எஜமானருடன் அமைதியான கணத்தில் ஒரு நாளைத் தொடங்குங்கள் அல்லது முடியுங்கள் அல்லது இரண்டையும் செய்யுங்கள். தேவன் உங்களைப் புதுப்பிப்பார்!*

---

## *செய்தி என்ன?*

*"ஓ தேவனே, எங்களை நினைவுகூரும், எங்களை மீளக்கட்டி எழுப்பும், எங்களைப் புதுப்பியும்." வேறொரு வகையில் கவலை மிகுந்த பாடல் ஒன்றிற்கு இது எவ்வளவு பொருத்தமான பல்லவியாக இருக்கிறது! எரேமியாவின் இந்த எளிய ஜெபம் நமது அன்றாட ஜெபங்களின் ஒரு பகுதியாக இருக்க வேண்டும். அவரது வார்த்தைகள் நாம் பாடுகின்ற ஒரு ஜெபப்பாடலை எனக்கு நினைவூட்டுகிறது:*

When storms around are sweeping,
When lone my watch I'm keeping,
'Mid fires of evil falling,
'Mid tempter's voices calling,
When walking on life's ocean,
Control its raging motion;
When from its dangers shrinking,
When in its dread deep sinking,
When weight of sin oppresses,
When dark despair distresses;
All through the life that's mortal,
And when I pass death's portal,
Remember me, O mighty One!
Remember me, O mighty One![1]

*கடல் கொந்தளித்துப் பொங்க கப்பல் ஆடிச் செல்கையில்,*
*புயல்காற்று சீறி வீச பாய் கிழிந்து போகையில்,*
*இயேசு எங்களிடம் வந்து கப்பலோட்டியாயிரும்;*
*காற்றமர்த்தித் துணைநின்று கரை சேரச் செய்திடும்*
*கப்பலிலே போவோருக்கு கடும் மோசம் வரினும்,*
*இடி மின் முழக்கம் காற்று உமக்கெல்லாம் அடங்கும்*
*இருளில் நீர் பரஞ்சோதி வெயிலில் நீர் நிழலே,*
*யாத்திரையில் திசைகாட்டி சாவில் எங்கள் ஜீவனே*
*எங்கள் உள்ளம் உம்மை நோக்கும் இன்ப துன்ப காலத்தில்*
*எங்கள் ஸ்தலத்தில் கிருபை தந்து வல்லமை நீர் ஈந்திடும்*
*இயேசு எங்களிடம் வந்து கப்பலோட்டியாயிரும்*
*காற்றமர்த்தி துணை நின்று கரை சேரச் செய்திடும்!*

*(குறிப்பு: இவ்விடத்தில் ஆங்கிலத்தில் உள்ள பாடல் தமிழக சபைகளுக்குப் பழக்கம் இல்லாத ஒன்றாக இருப்பதால் இதற்கு ஒத்த கருத்துடையதும் தமிழக சபை மக்கள் நன்கு அறிந்ததுமான மேற்கண்ட பாடலை இவ்விடத்தில் தருவது சிறந்தது.)*

*சிலவேளைகளில் தேவன் தூரத்தில் இருப்பதுபோல் காணப்படுகிறது. நாம் களைப்படைந்து, சலிப்படைந்து, நம்பிக்கையிழந்து போய் விடுகின்றோம். நாம் சற்றே விலகியிருக்க விரும்பும் அளவுக்கு இந்த உலகமானது மிக வேகமாகச் சுற்றிக்கொண்டிருக்கிறது. மாற்றங்கள் நம்மால் ஈடுகொடுக்க இயலாத அளவுக்கு மிக வேகமாக வருகின்றன. ஏதொன்றினாலும் அசைக்க முடியாத நிலையான அஸ்திபாரம் ஒன்றிற்காக நாம் ஏங்குகின்றோம். அந்த உறுதித்தன்மையைத் தேவனுடைய மீளக்கட்டியெழுப்புதலும் புதுப்பித்தலும் தருகிறது. அதனால் தான் பவுல் எபேசுவில் இருந்த கிறிஸ்துவர்களுக்காகத் தாம் ஜெபித்த ஜெபத்தைப் பின்வரும் வார்த்தைகளைக் கொண்டு முடித்திருக்க வேண்டும்:*

> *நாம் வேண்டிக்கொள்ளுகிறதற்கும் நினைக்கிறதற்கும் மிகவும் அதிகமாய் நமக்குள்ளே கிரியைசெய்கிற வல்லமையின்படியே, நமக்குச் செய்ய வல்லவராகிய அவருக்கு, சபையிலே கிறிஸ்து இயேசுவின் மூலமாய்த் தலைமுறை தலைமுறைக்கும் சதாகாலங்களிலும் மகிமை உண்டாவதாக. ஆமென் (எபே. 3:20, 21).*

*உலகத்தின் இராட்டினத்தில் இருந்து கொஞ்சக்காலம் கீழே இறங்குங்கள். அமைதியாக இருந்து தேவன் சொல்வதைக் கவனித்துக் கேளுங்கள். அவர் உங்கள் வாழ்வை அது இருக்க வேண்டிய முறைப்படி மாற்ற/ஆக்க முடியும். அவர் உங்கள் ஆத்துமாவுக்குப் புத்துணர்வூட்டி, எதிர்ப்புகளின் மத்தியிலும் கூட வாழ்தலுக்கான நோக்கத்தை உங்களுக்கு அருள முடியும். அவர் உங்கள் ஆவியை பரிசுத்தமற்ற வாழ்வின் இரண்டாந்தர வகைக்கு மேலாக உயர்த்த முடியும்.*

*ஒருவேளை நீங்கள் தவறான செய்கையால் துன்புற்றுக் கொண்டிருக்கலாம். நீங்கள் விரோதியின் கோட்டைக்குள் அலைந்து திரிந்து உலகத்தின் மாயையான கவர்ச்சிகளுக்கு இரையாகி இருக்கலாம். நீங்கள்*

*சோதிக்கப்பட்டு, பரீட்சிக்கப்பட்டு, சிட்சிக்கப்பட்டிருக்கலாம்; ஆனால் தேவன் உங்களை நினைவுகூருகின்றார் மற்றும் அவர் உங்களை மீளக்கட்டி எழுப்பி, புதுப்பிக்க விரும்புகின்றார். நீங்கள் அவரை அனுமதிக்கத் தயாராகும் எந்த வேளையிலும், அவர் உங்கள் இருதயத்தில் தங்கியிருந்து உங்கள் வாழ்வில் தமது கிரியையைத் தொடங்க ஆயத்தமாக இருக்கின்றார்.*

---

*குறிப்பு*

[1]Joanna Kinkel, arr., "Remember Me, O Mighty One," *Songs of the Church*, ed. Alton H. Howard (West Monroe, La.: Howard Publishers, 1977).